CC. No.68 /2016
Dated : 25.02.2019
அசா.35, துரைராஜ்

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரனை

இந்த வழக்கில் பிரிவு 81ன் கீழான விசாரணை அதிகாரி என்ற முறையில் குற்ற இணங்களை பொறுத்து முழுமையாக விசாரிக்க அறிக்கை தாக்கல் செய்தது நான் தான். 81 விசாரணை அறிக்கை முழுக்க முழுக்க நான் விசாரணை செய்ததுதான் அடிப்படையில் கொடுக்கப்பட்டது தான். விசாரனைக்கு நான எடுத்துக் கொள்ளப்பட்ட காலம் 6 மாதம் ஆகும். நான் விசாரித்த வரையில் எந்த கட்டத்திலிருந்து எந்த கால கட்டம் வரை எத்தனை இனங்களில் மோசடி செய்யப்பட்டது என்றால் 2012-2013 கால கட்டங்களில் மோசடி நடைபெற்றது. 30.6.2011 முதல் 17.7.2013 வரையான கால கட்டங்களில் மோசடி நடைபெற்றது. மொத்த மோசடி இனங்கள் 17 ஆகும். மோசடி இனங்கள் அனைத்தும் காசோலை மூலமாகவும், பற்றுச்சீட்டு மூலமாகவும் நடைபெற்றது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள விசாரணை அறிக்கையை தவிர வேறு எந்த அறிக்கையும் இல்லை. இரண்டாம் எதிரியும், ஐந்தாம் எதிரியும் முறைகேடு செய்ததாக எனது விசாரனை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். விசாரணை அறிக்கை பக்கம் 41ல் முறைகேடு இனம் 14ல் ரூ.7400/- கையாடல் செய்ததை யார் என்று குறிப்பிட்டிருக்கிறேனா என்றால் செயலாளர் அதியமான்நெடுமான்அஞ்சி கையாடல் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அது நிரூபனம் ஆகிவிட்டதால் அவர் அந்த தொகையை வட்டியுடன் செலுத்தியுள்ளார் என்றும் நான் விசாரனை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான். முறைகேடு இனம் 15ல் ரூ.5000 கையாடல் செய்ததாக குறிப்பிடப்படடுள்ளது. அதில் கையாடல் செய்ததை யார் என்று குறிப்பிட்டிருக்கிறேனா என்றால் செயலாளர் அதியமான்நெடுமான்அஞ்சி கையாடல் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அது நிரூபனம் ஆகிவிட்டதால் அவர் அந்த தொகையை வட்டியுடன் செலுத்தியுள்ளார் என்றும் நான் விசாரனை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது விசாரணை அறிக்கையில் இறுதி கருத்தாக நான் என்ன சொல்லியிருக்கிறேன் என்றால் செயலாளர் அதியமான்நெடுமான் அஞ்சி குற்றம் இழைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன். 1 முதல 17 வரையான குற்ற இனங்கள் அனைத்தும் செயலாளர் அதியமான்நெடுமான்அஞ்சியால் செய்யப்பட்டதாக நிரூபணம் ஆகியுள்ளது என விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் 9.12.2013ல் ரூ.50,000மும், 16.12.2013ல் ரூ.2,50,000மும், 12.4.2013ல் வட்டியாக ரூ76,200மும் ஆக மொத்தம் ரூ.3,76,200/ மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் மகளிர் கிளையில் உள்ள சங்க சேமிப்பு கணக்கில் அவரால் செலுத்தப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி முறைகேடுகள் அனைத்திற்கும் அதியமான்நெடுமான்அஞ்சியே முழு பொறுப்பு ஆவார் என அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த முறைகேடுகள் சம்மந்தமாக முதலில் எப்படி தெரிய வந்தது என விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் மத்திய கூட்டுறவு வங்கியின் கலப்பணியாளர்கள் ஆய்வு செய்த அறிக்கையை துணை பதிவாளர் அவர்களுக்கு சமர்ப்பித்திருந்தார்கள். அதன் அடிப்படையில் பிரிவு 81 ன் கீழான விசாரணையை மேற்கொண்டேன். விசாரணை அறிக்கை பக்கம் 51ல் இறுதியாக குற்ற வழக்கு தொடர்பான அறிக்கை என்ற தலைப்பின் கீழ் செயலாளர் அதியமான்நெடுமான்அஞ்சி மீது மட்டும் குற்ற வழக்கு தொடங்கலாம் என்று பரிந்துரை செய்தேன் என்றால் சரிதான். அதேபோல் விசாரணை அறிக்கை பக்கம் 55ல் கண்ணன், பவுனி சக்திவேல், சிவா ஆகியோர் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள பரிந்துரை செய்ய குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது விசாரணை அறிக்கையில் பணியாளர்கள் யார் யார் எந்த எந்த பொறுப்பிலிருந்து கடமை தவறியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. யார் யாருகக என்ன என்ன பொறுப்பு கடமை என குறிப்பிட்டுள்ளேன். எனது விசாரணை அறிக்கையில் பவுனி என்பவர் விற்பனையாளர் என்று சொல்லப்பட்டிருக்கிறதா என்றால் சரிதான் அவர்

எழுத்தர் பணியையும் சேர்த்து கவனிப்பார். நான் சொல்வதுபோல விற்பனையாளரிடம்

சங்கம் சம்மந்தமான எந்த பேருரேடுகளும் அவரது பொறுப்பில் இருக்காது என்றால சரிதான். காசாளராக பொறுப்பிலிருந்ததால் பேரேடுகளை பராமரித்து வந்தார். தனி அலுவலர் பொறுப்பு முடிந்த பின்பும் தான் 5ம் எதிரி மல்லன் சங்கத் தலைவராக பொறுப்பு ஏற்றார் என்றால் சரிதான். அதற்க முனபு வரை தனி அலுவலரும் செயலாளரும் காசோலையில் கையொப்பம் செய்வார்கள் என்றால் சரிதான். 9.5.2013ம் தேதி தான் 5ம் எதிரி மல்லன் தலைவராக பொறுப்பேற்றார் என்றால் சரிதான். அதற்கு முன்பு முறைகேடுகள் நடந்த கால கட்டங்களில் அசா.7.அசா.8, அசா.9 மூவரும் தனி அலுவலர்களாக இதே சங்கததில் பொறுப்பேற்றிருந்தார்கள் என்றால் சரிதான். அசா10 கண்ணன் என்பவரும் மேற்படி கால கட்டததில் செயலாராக பொறுப்பேற்றிருந்தார் எனஎ்றால் சரியல்ல. முறைகேடுகள் நடந்த பின்பு தான் பொறுப்பேற்றார். முறைேகடுகள் நடந்த கால கட்டத்தில் அசா.10 கண்ணன் சங்க பணியாளராக இருந்தார். அசா10 மீதும் ஒழுங்கு நடவடிகை எடுக்க வேண்டும் என நான் விசாரனை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அசா.7, அசா.8, அசா.9 ஆகிய மூன்று தனி அலுவலர்களும் கையொப்பமிட்ட காசோலைகள் இந்த முறைகேடுகள் இனத்தில் வருகிறது என்றால் சரிதான். அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி எனது விசாரணை அறிக்கையில் பரிந்துரை செய்யவில்லை என்றால் சரிதான். எனது விசாரணை அறிக்கையில் அசா.7, அசா.8, அசா.9 ஆகியோர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யாததற்கான காரணம் என்ன வென்றால் தனி அலுவலர் என்ற பொறுப்பு கூடுதல பொறுப்பு ஆகும். சுமார் 7,8 சங்கங்களுக்கு தனி அலுவலர்களாக பொறுப்பு வகிப்பார்கள். காசோலையில் செயலாளருடன் சேர்ந்து தனி அலுவலர் சேர்ந்து கூட்டாக கையொப்பம் செய்வார். பண நடவடிக்கைகளை செயலாளர் மட்டும் தனியாக கவனிப்பார். அதனால் தனி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கவில்லை. அசா.7, அசா.8, அசா.9 ஆகியோர் எங்கு பணியாற்றினார்கள் என்றால் குறிப்பாக தெரியாது. பொதுவாக அலுவலகங்களில் பணி புரிவார்கள். காசோலையில கூட்டாக தனி அலுவலர் செய்யும் கையொப்பத்தை எங்கு வைத்து பெற முடியும் என்றால் அவர் பணிபுரியும் அலுவலகத்தில் வைத்து பெறலாம். தனி அலுவலர் சங்க பணியாளர் இல்லை. கூட்டாக காசோலையில் கையொப்பம் செய்யும்பொழுது சங்க நடவடிக்கைகளை பற்றி கண்காணிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் தனி அலுவலருக்கு உள்ளதா என்றால் உள்ளது. அசா.23 சரவணன் என்பவர் சேமிப்பு கணக்கில் ரூ.7400/= பணம் வராத நிலையில் வந்ததாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு பற்றுச்சீட்டுக்கள் மூலம் பணம் வழங்கி அதியமான் நெடுமான் அஞ்சி, சக்திவேல் மற்றும் சங்கத்தலைவர் மல்லன் ஆகியோர் கூட்டாக சேர்ந்து சங்கத்திற்கு நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள் என்று எனது முதல் விசாரனையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். ஆனால் எனது 81 விசாரணை அறிக்கையில் இதுபோல் கூறவில்லை என்றால் சரிதான். அசா.20 சேகர் என்பவர் சேமிப்பு கணக்கில் ரூ.5000/=பொய்யாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு பற்றுச்சீட்டு மூலம் அதியமான்நெடுமான்அஞ்சி மற்றும் காசாளர் பவுனி இருவரும் சங்கத்திற்கு நிதியிழப்பு ஏற்படுத்தியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் 81ன் விசாரணை அறிக்கையில இதுபோல் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் ஐவரும் ஒன்று சேர்ந்து 1 முதல 17 வரையான குற்ற இனங்களில் சங்க நிதி ரூ.2,53,539/= அளவிற்கு சங்கத்திற்கு நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளேனா என்று விசாரனை அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். கூடுதல் அறிக்கை கொடுத்துள்ளேன். 81ன் விசாரணை அறிக்கையின் கூடுதல் அறிக்கை நீதிமன்றத்தில தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. காவல் துறையினர் என்னை விசாரிக்கும்பொழுது ஆவணங்களை பரிசீலனை செய்யும்பொழுது நானும் உடன் இருந்தேன். அப்பொழுது நான் முதல் விசாரனையில் சொன்ன விசரங்களை பற்றி கூடுதல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். கூடுதல் விசாரணை அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மோசடி இணங்களில் தாக்கல் செய்துள்ள முறைகேடு நடந்த காலக்கட்டங்களில உள்ள பேரேடுகள் அனைத்தும் பராமரித்தது செயலாளரின் பணி என்றால் சரிதான். முறைகேடு இணம் 14 தொடர்பாக எந்த பேரேடுகளிலும் 5ம் எதிரி மல்லன் கையொப்பம் செய்ததாக இல்லை என்றால் பேரேடுகளில் இல்லை ஒரு பற்றுசீட்டில் கையொப்பம செய்துள்ளார். சங்கம் முழுக்க முழுக்க செயலாளரின் கட்டுப்பாட்டில் தான் இருக்கும் என்றால் சரிதான். தலைவரின் மேற்பார்வை இருக்கும். நான் கூட்டுறவு சங்கததில் எந்த நிலையில பணியில் சேர்ந்தேன் என்றால் இளநிலை

ஆய்வாளராக பணியில் சேர்ந்தேன். கூட்டுறவு துறையில் இளநிலை ஆய்வாளராக பணியில் சேர்ந்தேன். கூட்டுறவு துறையில் என்னென்ன பணிகளை மேற்கொள்வார்கள் என்றால் சங்கங்களை பதிவு செய்தால் சங்கங்கள் செய்யும் பணிகளை பொருத்த அவ்வபபோது அரசு கேட்கும் புள்ளி விவரங்களை பெற்று அனுப்புவது பொது விநியோக திட்டத்தை கண்காணித்தல். சங்கங்களை மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளை மேற்கொள்வார். சங்கங்கள் என்று நான் குறிப்பிட்டது எல்லாமே கூட்டுறவு சங்கங்கள் தான். நான் கூட்டுறவு சங்கங்களில் பணியாளராக பணியாற்றவில்லை. செயலாளர் கேட்கும்பொழுது தனி அலுவலர் நம்பிக்கையின் பேரில் கூட்டு கையொப்பம் செய்வதை போலவே தலைவரும் செயலாளர் கேட்டால் நம்பிக்கையின் பேரில் கையொப்பம் போடுவார் எனறால் சரிதான். இதுபோன்ற நன்னம்பிக்கையின் அடிப்படையில் தான் கூட்டுறவு சங்கங்கள் செயல்படுகிறது என்றால் சரிதான். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் தான் அசா.5 குற்ற எண் 14ஐ பொறுத்த பற்றுச்சீட்டில் கையொப்பம் செய்துள்ளார் என்றும். அதனால்தான் நான் 81ன் விசாரணை அறிக்கையில் அந்த குற்ற இனத்தை பொறுத்த முறைகேட்டில் தலைவர் மல்லன் சம்மந்தமில்லை என்று கூறியிருக்கிறேன் என்றால் நான் அவ்வாறு குறிப்பிடவில்லை. குற்ற இணம் 15ல் சேமிப்பு கணக்கு பதிவடேுகளில் 2ம் எதிரி பவுனி கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் பதிவடேுகளில் கையொப்பம் செய்யவில்லை. பற்றுச்சீட்டுகளில் கையொப்பம் செய்துள்ளார். பதிவேடுகளை யார் வரவு வைத்துள்ளார் என்றால் செயலாளர். பற்றுச்சீட்டில் செயலாளர், காசளார் இருவருமே கையொப்பம் போடுவார்கள். தனி அலுவலர் நம்பிக்கையின் பேரில் கையொப்பம் செய்வதைபோல செயலாளர் கேட்டால் காசளாரும் கையொப்பம் போடுவார் என்றால் செயலாளர் காசளாரிடம் கையொப்பம் கேட்பதிலலை. செயலாளர் பற்றுச்சீட்டில் கையொப்பம் செய்வதுடன் அந்த பற்றுச் சீட்டை காசளரிடம் கொடுத்து பணமாக்குவார். முறைகேடுகள் நடந்த சயமத்தில் சங்கத்தின் காசாளர் பொறுப்பில யார் இருந்தார்கள் என்றால், மல்லன், பவுனி, சக்திவேல் முவருமே பொறுப்பிலிருந்தார்கள். மூவரும் காசளாராக பொறுப்பிலிருந்த நிலையில் எந்த சூழ்நிலையில் 2ம் எதிரி பவுனி பற்றுச்சீட்டில் கையொப்பம் செய்து கொண்டார் என நான் விசாரனையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். பற்றுச்சீட்டில் செயலாளர் கையொப்பம் இருந்ததால் காசளார் அதில் கையொப்பம் செய்வார். 2ம் எதிரி பவுனி விற்பனையாளராக இருந்தா என்றால சரிதான். காசளார் பொறுப்பையும் கவனிப்பார். 2ம் எதிரி எந்த நேரத்தில் அந்த கையொப்பம் செய்தார் என எனது விசாரனையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. 2ம் எதிரி பவுனி மதிய உணவு இடைவேளைக்கு சென்றுவிட்டு வந்த சமயத்தில் செயலாளர் அவரிடம் பற்றுச்சீட்டில் குறிப்பிட்டுள்ள பணததை சம்மந்தப்பட்ட வாடிக்கையாளாருக்கு கொடுத்துவிட்டதால் பற்றுச்சீட்டில் கையொப்பம் செய்யும்படி கேட்டார் என்றும், அதனால் 2ம் எதிரி பற்றுச்சீட்டில் கையொப்பம் செய்தார் என்றும் எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரியாது. குற்ற இனம் 14, 15 தொடர்பாக பற்றுசீட்டில் தொடர்புடைய வாடிக்கையாளர்களான சரவணன், சேகர் இருவரும் 2ம் எதிரி மற்றும் 5ம எதிரிகள் மீது எந்த குறறச்சாட்டும் எனது விசாரனையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி 2 குற்ற இனங்களுக்கும் 2ம், மற்றும் 5ம் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்ற காரணத்தினால்தான் அந்த குற்றச்சாட்டு தொடர்புடைய வாடிக்கையாளர்களான சரவணன், சேகர் இருவரும் 2, 5ம் எதிரிகளை பற்றி எதுவும் சொல்லவில்லை என்றும் எனது விசாரனை அறிக்கையிலும் நான் அதை பற்றி சொல்லவில்லை என்றும் சொன்னால் நான் விசாரனை அறிக்கையில் அவர்கள் மீது எந்த குற்றச்சாட்டும் சொல்லவில்லை. குற்ற இணம் 14, 15 தொடர்புடைய பற்றுச்சீட்டுகளில் இரண்டாம் எதிரியும, ஐந்தாம் எதிரியும் நம்பிக்கையின்பேரில் தான் கையொப்பம் செய்தார்கள் என்றும், அந்த முறைகேடுகளில் 2, 5ம் எதிரிகளுக்கு எந்த தொடர்பும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. அதன் காரணமாக தான் விசாரனை அறிக்கையில் எந்த குற்றச்சாட்டும் சொல்லவில்லை என்றால் அவர்களுக்கு தொடர்பில்லை என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. அவர்கள் மீது குற்றச்சாட்டோ முறைகேட்டில் பங்கு இருப்பதாக விசாரணை அறிக்கையில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது 81ன் விசாரனை அறிக்கைக்கு முரனாக குற்ற இனம் 14, 15 தொடர்பாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது விசாரணை அறிக்கை சரியானதல்ல என்றால் அவ்வாறு சொல்ல முடியாது. இரணடாம் மற்றும்

ஐந்தாம் எதிரிகள் நன்னம்பிக்கையின் அடிப்படையில் கையொப்பம் செய்ததை கருத்தில் கொள்ளாமல் குற்றத்திற்கும் அவர்களுக்கும் தொடர்பில்லை என்று தெரிந்தே போலீசார் தாக்கல் செய்த குற்றப்பத்திரிக்கைக்கு அனுசரனையாக அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குற்ற இனங்களைப் பொறுத்து அனைத்து தொகையும் முதலாம் எதிரியிடமிருந்து வட்டியுடன் வசூலிக்கபட்டு விட்டதாக எனது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாம் எதிரி குற்றத்தை ஒப்புக்கொணடு தொகையை செலுத்தினாரா அல்லது கட்டாயத்தின் பேரில் அவர் செலுத்தினரா என்றும் நான் தெரிந்து கொணடேனா என்றால் எனக்கு தெரியாது. ஆவணங்களில் தொகை செலுதியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனது விசாரணை அறிக்கைக்கு முன்பாகவே பணம் வசூலிக்கப்பட்டு விட்டது என்பதால் தான் எனது விசாரணை அறிக்கையில் அதை பற்றி குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எவ்வாறு பணம் வசூலிக்கப்பட்டது என தெரிந்து கொண்டு நான் விசாரனை அறிக்கை தயார் செய்தேன் என்றால் அவர் தான் செலுத்தினார் என தெரிந்து கொணடேன். முறைகேடுகள் நடந்த சமயத்தில் கூட்டுறவு சங்கத்தில் எத்தனை பேர் வேலை செய்தார்கள் என்றால் நான்கு பேர்கள் வேலை செய்தார்கள். நான்கு நபர்களில் ஒரு நபர் மோசடி இனங்கள் குறித்த குற்றத்தை ஒப்புக்கொண்டு வட்டியுடன் முழுத்தொகையும் செலுத்தியுள்ள நிலையில் மற்றவர்களுக்கு அந்த குற்றத்தில் பொறுப்பு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. குற்ற இனம் தொடர்பாக பேரேடுகளில் இரண்டாம் மற்றும் ஐந்தாம் எதிரிகளின் பதிவோ, கையொப்பமோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. குற்ற இனம் தொடர்பான நாள் வழி பேரேட்டில் இரண்டாம் எதிரி பவுனி கையொர்பபம் செய்துள்ளார். குற்ற இணம் தொடர்பாக சேமிப்பு கணக்கு பேரேடடில் இரண்டாம் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். மேற்படி குற்ற இணஙகள் தொடர்பான மோசடிகள் நடைபெற்ற கால கட்டத்தில கணினி வழி பதிவுகள் செய்யப்படுவது இல்ரைல. பேரேடுகளில் பணியாளர்கள் தான் பதவி செய்வார்கள். இரண்டாம் மற்றும் ஐந்தாம் எதிரிகள் தொடர்பான குற்ற இனங்களுக்கும் அந்த எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. புலன் விசாரனை அதிகாரி கேட்டுக்காண்டதால் எனது எனது 81ன் விசாரனை அறிக்கைக்கு முரனாக இரண்டாம் மற்றும் ஐந்தாம் எதிரிகளுக்கு எதிராக பொய் சாடசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.